# *புகழ்ச்சிக்கூட்ட நற்செய்தி*

*2018 தை மாதம் 07ம் திகதி முதல் 14ம் திகதி வரை*

**“விசுவாசம் (நம்பிக்கை) பரிசுத்த ஆவியானவரின் கொடையாகும்”**

01. ஆரம்பப் புகழ்ச்சிக்காக :புபுது பாடல் இல. 07 “தூய ஆவியே எம் மனதை…”

புகழ்ச்சிகான அறிமுகம் :

***“தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்.”***(புனித யோவான் 3:16)

திருமுழுக்கின் வழியாக இறை புத்திரத்தன்மையை உரிமையாக்கிக் கொண்ட நாம் அவரை விசுவசிக்கின்றோம். இறைவனது அன்பை வல்லமையாக அனுபவிப்பதற்கு பாக்கியம் பெற்றவர்கள் என்றவகையில் முழு உள்ளத்தோடு அவரைப் புகழ்வோம். எம்மீது அவர் கொண்ட அன்பை முன்கொண்டு பெருமையுடன் மகிழ்ச்சி ஆரவாரம் செலுத்துவோம்.

புபுது பாடல் இல. 134 “பரம நிறைவின்….”

02. நாளுக்குரிய நற்செய்தி விசுவாசம் (நம்பிக்கை) பரிசுத்த ஆவியானவரின் கொடையாக

நம்பிக்கை செயல்படுவது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் தொடர்பின் அடிப்படையில் ஆகும். நம்பிக்கை கொடையாகும். பரிசாகும். ஆதை மனித முயற்சியினால் பெற்றுக் கொள்ளமுடியாது. இறைவனால் மாத்திரம் அருளப்படுகின்ற கொடையாகும். நம்பிக்கை எனும் கொடை எமக்கு கிடைப்பது திருமுழுக்கின் வழியாகவே. திருமுழுக்கின் போது அவ் வழிப்பாட்டில் குருவானவர் உங்கள் குழந்தைக்காக இறைவனது பரிசுத்தமான திருச்சபையிடம் என்ன கேட்கின்றீர்கள் என வினவும் கேள்விக்கு பெற்றோர்களின் பதில் திருமுழுக்கை பொழிவது என்பதாகும். அவர் செபத்தில் இவ்வாறு வெளிப்படுத்துகின்றார். ‘உங்கள் குழந்தைக்கு திருமுழுக்கு பொழியுமாறு கேட்கின்றீர்கள். அதன் வழியாக அவர்களை இறை விசுவாசத்தில் வளர்ப்பதற்கு பொறுப்பை ஏற்றுகொள்கிறீர்கள்.’ என்று, அதேபோல் வயது முதிர்ந்தவர்களுக்கான திருமுழுக்கின் பொது திருமுழுக்கை பெறுபவர் விசுவாசத்தை கேட்பார். இதன் வழியாக தெளிவாகுவது என்னவென்றால் விசுவாசம் எனும் கொடை எமக்கு கிடைப்பது திருமுழுக்கு பெறும் பொழுதேயாகும்.

புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

**“அதே ஆவியார் வேறொருவருக்கு நம்பிக்கை அருளுகிறார்.”** (1 கொரிந்தியர் 12:9) இவ் வெளிப்பாட்டினுள் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் வல்லமையாக, செயல்கள் அடையாளங்கள் வழியாக இறைஅரசை வெளிப்படுத்த, கிடைக்கின்ற வரமாக விசுவாசம் எனும் கொடையை குறிப்பிட்டுள்ளார். விசுவாசம் எனும் கொடையை பெற்றவர் இறைவனது அன்பை அதிக வல்லமையாக அனுபவிப்பார்.

03. எம் பக்கம் (குழுவினுள் பகிர்ந்துகொள்ளவும்.)

- திருமுழுக்கின் அழைப்பின் வழியாக நாம் பெற்ற விசுவாசம் எனும் கொடையை அன்றாட வாழ்வினுள் எவ்வாறு அனுபவிக்கின்றோம்.
- நம்பிக்கை கொள்பவரினால் இறைவன் செயல்படுத்துகின்ற வல்லமையான செயல்களை அனுபவிக்க நாம் ஆயத்தமா?
- விசுவாசம் எனும் கொடையை நாம் அனுபவித்தவாறு கிறிஸ்தவ சீடனாக சாட்சி பகிர்வதற்கு நாம் எந்தளவு முயற்சி எடுத்து இருக்கின்றோம்?

04. இறுதி செபம்.–.

புபுது பாடல் இல. 54 ''சீவியத்தின் தேவனே…''

## *புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி*

***2018 தை மாதம் 15ம் திகதி முதல் 21ம் திகதி வரை***

### ''விசுவாசஒலி இறைவனிடமிருந்து நாம் பெற்றுள்ள புதிய பரிசாகும்.''

01.ஆரம்பப் புகழ்ச்சிக்காக

- கிறிஸ்தவ சீடன் தினமும் வாழ்கையில் முகம் கொடுக்க நேரிடுகின்ற விருப்பமற்ற நிகழ்ச்சிகளிலும் விசுவாசஒலியில் கண்டு இறைவனைப் புகழ்வார். ஏனென்றால் இறைவன் தன்னோடு இருக்கின்றார் என்பதை உறுதியாக விசுவாசித்தவாறு வெளிப்படையாக தெரிகின்றவகைகளை விட கண்ணுக்கு புலபடாத நன்மையை அவர் காண்கின்றபடியினாலாகும். தனது முழு எதிர்பார்ப்பையும் இறைவன் மிது வைத்து நன்மையை செய்வார்.
- ஏசாயா 42:3 தியானித்தவாறு புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்.
  ''ஏனெனில் உன் கடவுளாகிய ஆண்டவர் நானே. இஸ்ரயேலின் தூயவரும் உன்னை விடுவிப்பவரும் நானே.''
  - புபுது பாடல் இல18 ''எந்தன் உயிர் நீரே…''

கடந்த வாரத்தின் அனுபவங்களை பகிர்ந்துகொண்டு அவ் அனுபவங்களுக்காகவும் இறைவனைப் புகழ்வோம்.

02. நாளுக்குரிய நற்செய்தி

- உலக படைப்பின் போது முதலாம் படைப்பாகிய ஒலியின் வழியாக, உலகத்திற்கு புதியபிறப்பு கிடைத்தது. அவ்வாறே கிறிஸ்தவ வாழ்க்கையின் வழியாக புதியபிறப்பு கிடைப்பதற்கு விசுவாசஒலியே காரணமாக அமைந்தது.
- கிறிஸ்துநாதரை சந்திக்கும் அனுபவத்தின் வழியாக விசுவாசத்தின் பரிசை உரிமையாக்கிக் கொண்ட புனித சின்னப்பர் விசுவாசஒலியினால் இறைவனை அறிந்து கொண்டது மாத்திரமல்ல தனிப்பட்ட தொடர்பையும் வளர்த்துக் கொண்டார்.
- இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திருவிவிலிய பகுதியை வாசித்து விசுவாசஒலியை முன்கொண்டு உயிருள்ள கிறிஸ்துநாதரைப் பற்றி புனித சின்னப்பர் அனுபவித்த விதத்தை கலந்துரையாடவும்.

- (கொலோசியர் 1:24-27)

  *“இப்பொழுது உங்கள் பொருட்டுத் துன்புறுவதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன். கிறிஸ்து தம் உடலாகிய திருச்சபைக்காக வேதனையுற்றார். அவர்மேலும் படவேண்டிய வேதனையை என் உடலில் ஏற்று நிறைவுசெய்கிறேன். என் மூலம் இறைவார்த்தையை முழுமையாக உங்களுக்கு வழங்கும் பொறுப்பை கடவுள் எனக்குத் கொடுத்தார். எனவே நான் திருத்தொண்டன் ஆனேன். நான் வழங்கும் இறைவார்த்தை ஊழிஊழியாக தலைமுறைதலைமுறையாக மறைந்திருந்த இறைதிட்டத்தைப் பற்றியது அத்திட்டம். இப்பொழுது இறைமக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது........உங்களுக்குள் இருக்கும் கிறிஸ்துவை பற்றியதே அத்திட்டம்.”*

03. வார்த்தையின் ஊழியருக்காக

- பரிசுத்த ஆவியானவரை முன்கொண்டு புனிதசின்னப்பர் விசுவாசஒலியினூடாக அனுபவித்த வெளிப்பாட்டைப் பற்றி நாம் கதைத்தோம். ஏளிதான உதாரணத்தினால் நாம் அதை தெளிவுப்படுத்திக் கொண்டோம்.
- ஒரேபொருளை பல விதமான ஒலியினூடாக காணலாம். மின்மினிபூச்சியின் ஒலியில் ஒரளவு காண முடியும். மெழுகுவத்தியின் மூலம் அதைவிட சிறிது அதிகமாக தெளிவாக காண முடியும். வல்லமையான ஒலிகதிர்கள் மூலம் அதைவிட தெளிவாக காண முடியும். அவ்வாறே பரம சத்தியமான கிறிஸ்துநாதரை கண்டவாறு, யதார்த்தை விளங்கிக் கொள்வதற்கு மிகவும் வல்லமையான ஒலி விசுவாச ஒலியாகும்.
- ஆகையால் வாழ்க்கை, மரணம் அதுபோல துன்பதுயரங்கள், பீடணைகள் அனைத்தையும் புதிய விதத்தில் பார்ப்பது என்பது….எமக்கு கிடைத்து இருக்கின்ற விசுவாசஒலி என்னும் மிகப் பெரிய பரிசாகும்.

04. இறுதி புகழ்ச்சி

- விசுவாசஒலி என்னும் பரிசுக்கு, பாதையை தெளிவுப்படுத்துகின்ற இப் பரிசை ஆழமான வித்தில் அதிகரித்து கொள்வதற்கு தேவையான பரிசுத்த ஆவியானவரின் பொழிவிற்காக செபிப்போம்.
- கலாத்தியர் 2:20 குறிப்பிடப்பட்டுள்ள கிறிஸ்தவ சத்தியத்தை உரிமையாக்கிக் கொள்வோம். “இப்பொழுது நானல்ல நீரே என்னுள்” என்று பாடுவோம். அனுபவிக்கக் தொடங்குவோம்.

## *புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி*

***2018 தை மாதம் 22ம் திகதி முதல் 28ம் திகதி வரை***

### “விசுவாசம் உயிருள்ளது”

01. ஆரம்பப் புகழ்ச்சிக்காக :

- செபம் விசுவாசஒலியை வளர்த்துக் கொள்வதற்கு தேவையான முதன்மையான சூழலாகும். ஒரு சிறிய குழந்தைக்கு பரிசு ஒன்று கிடைக்கும் தனது இரு கைகளினாலும் அதை கட்டிபிடித்துக் கொள்வதுபோல் விசுவாசம் எனும் பரிசை

இறைவனிடமிருந்து பெற்றுக் கொண்டு எமது உடல், மனம், உள்ளம் ஆன்மா எனும் அனைத்து பகுதிகளினாலும் உரிமையாக்கிகொள்ளும் அளவிற்கு இவ் விலைமதிப்பற்ற பரிசினுள் மகிழ்ச்சியுறும் அளவிற்கு, புகழும் அளவிற்கு விசுவாசம் உயிருள்ளது என்பதை அனுபவிக்க முடியும்.

- 1 தெசலோனிக்கர் 5:16-17 **"எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள். இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள். எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள். உங்களுக்காகக் கிறிஸ்து இயேசு வழியாய்ச் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே."**

புது பாடல் இல. 103 "போற்றிப் புகழ்ந்திடுவோம்……….."

கடந்த வாரத்தின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டு அவ் அனுபவங்களுக்காகவும் இறைவனைப் புகழ்வோம்.

02. நாளுக்குரிய நற்செய்தி

- விசுவாசம் உயிரற்றது அல்ல. உயிருள்ள ஒன்றாகும். விசுவாசம் விதையைபோல் வளர்ந்து பலமடங்கு கனிகொடுக்கும். கனி கொடுப்பதற்கு அதற்கேற்ப சூழல் அவசியமாகும்.

i. விசுவாசம் உயிருள்ளது என்றபடியினால், அது சிறிது சிறிதாக வளர்ச்சியடையும் ஒன்றாகும். அப்படியானால் விசுவாசம் எனும் பரிசை நாம் எவ்வாறு வளர்ச்சியடைய செய்வது என்பதை கலந்துரையாடவும். அதற்காக எடுக்க வேண்டிய படிமுறைகள் என்னவென்பதையும் பகிர்ந்துக் கொள்ளுங்கள்.

ii. அவ்வாறே விசுவாசம் எனும் வல்லமையை ஆழமாக அனுபவித்த சந்தர்ப்பம் ஒன்றை பகிர்ந்து கொள்ளுங்கள்.

03. வார்த்தையின் ஊழியருக்காக

(அ) நீங்கள் ஒரு புத்தகத்தை வாசிக்கும் போது பெரியதொரு ஆவலுடன் வாசிப்பீர்கள் என்றால் அதன் அறிவு உங்களுக்கு உரிமையாகும். ஆவலுடன் மாத்திரமல்ல, அவ் விடயத்தை குறித்து அன்புடன் வாசிப்பீர்கள் என்றால், அதன் தரிசனம் உங்களுக்கு மேலும் உரிமையாகும். அவ்வாறே இறைவனைப் பற்றி நினைக்கின்ற, கதைக்கின்ற, செபிக்கின்ற ஒவ்வொரு கணத்திலும் பெரியதொரு ஆவலுடன், அன்புடன் கௌரவத்துடன் செய்வோமானால் இறைவன் அதிக அதிகமாக எமது அனுபவமாகுவார். அந்த அளவிற்கு எமது விசவாசம் வளர்ச்சி அடையும். அன்பின் வாக்குறுதிகளை அனுபவிக்க தொடங்குவோம். விசுவாசத்தின் வல்லமையை எத்தகையது என்பதை நாம் அனுபவித்தினூடாக அறிந்திருக்கின்றோம்.

(ஆ) இணைச்சட்டம் 31:8 **"ஆண்டவரே உனக்கு முன் செல்வார். அவர் உன்னோடு இருப்பார். அவர் உன்னை விட்டு விலகமாட்டார். அவர் உன்னைக் கைவிடவும் மாட்டார். அஞ்சாதே திகையாதே"**

- அவ்வாறு இறைவாக்குறுதி அதிக அதிகமாக உரிமையாக்கிக் கொள்வோம். மற்றவர்களுடன் விசுவாசம் கனி கொடுத்த விதத்தை பகிர்ந்துக் கொள்வோம்.

04. வாரம் முழுவதும் செயல்படுத்துவதற்கு :

- விசுவாசம் மூலம் நாம் உரிமையாக்கிக் கொண்டதை பகிர்ந்துக் கொள்வோம்.
- தனிமையாக மகிழ்வுறுவது மாத்திரமல்ல, அதைப் பற்றிமற்றவர்களுக்கு வெளிப்படுத்துதல்.
- செபத்தின் மூலம் வேண்டிய வேண்டுதலை உரிமையாக்கிக் கொண்டவாறு விசுவாசத்தில் சித்திரத்தை உறுதிப்படுத்திக் கொள்வோம். அக்கனவு நிறைவேறும் வரை இறைஆண்டவரைப் புகழ்வோம்.
- விசுவாச படி நிலைகளை எடுத்து விசுவாசத்தை பயிற்சி செய்வோம்.

06. இறுதி செபம். –

- விசுவாசம் உயிருள்ளது என்பதை அனுபவிப்பதற்கு எம்மை ஒலிமயமாக்குமாறு, வழிகாட்டுமாறு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை கேட்டு செபிப்போம்.

அருள் கொடைகள் பலவகையுண்டு ஆனால் தூய ஆவியார் ஒருவரே….அதே ஆவியார் வேறொருவருக்கு நம்பிக்கை அருளுகிறார்.'' (1 கொரிந்தியர் 12:4,9)